ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

## திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ ஏத்துகின்றோம் ॥

*This document** *has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

---

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ ஏத்துகின்றோம் ॥

## குழமணி தூரம்

‡ஏத்துகின்றோம் நாத் தழும்ப⋆ இராமன் திருநாமம்⋆
சோத்த நம்பீ! சுக்கிரீவா!⋆ உம்மைத் தொழுகின்றோம்⋆
வார்த்தை பேசீர் எம்மை⋆ உங்கள் வானரம் கொல்லாமே⋆
கூத்தர் போல ஆடுகின்றோம்⋆ குழமணி தூரமே (1)

எம்பிரானே! என்னை ஆள்வாய்⋆ என்றென்றலற்றாதே⋆
அம்பின் வாய்ப்பட்டாற்றகில்லாது⋆ இந்திரசித்தழிந்தான்⋆
நம்பி அனுமா! சுக்கிரீவா!⋆ அங்கதனே! நளனே⋆
கும்பகர்ணன் பட்டுப்போனான்⋆ குழமணி தூரமே (2)

ஞாலம் ஆளும் உங்கள் கோமான்⋆ எங்கள் இராவணற்குக்⋆
காலன் ஆகி வந்தவா⋆ கண்டஞ்சிக் கரு முகில் போல்⋆
நீலன் வாழ்க! சுடேணன் வாழ்க⋆ அங்கதன் வாழ்கவென்று⋆
கோலம் ஆக ஆடுகின்றோம்⋆ குழமணி தூரமே (3)

மணங்கள் நாறும் வார் குழலார்⋆ மாதர்கள் ஆதரத்தை⋆
புணர்ந்த சிந்தைப் புன்மையாளன்⋆ பொன்ற வரி சிலையால்⋆
கணங்கள் உண்ண வாளியாண்ட⋆ காவலனுக்கிளையோன்⋆
குணங்கள் பாடி ஆடுகின்றோம்⋆ குழமணி தூரமே (4)

வென்றி தந்தோம் மானம் வேண்டோம்⋆ தானம் எமக்காக⋆
இன்று தம்மின் எங்கள் வாணாள்⋆ எம்பெருமான் தமர்காள்⋆
நின்று காணீர் கண்கள் ஆர⋆ நீர் எம்மைக் கொல்லாதே⋆
குன்று போல ஆடுகின்றோம்⋆ குழமணி தூரமே (5)

கல்லின் முந்நீர் மாற்றி வந்து⋆ காவல் கடந்து⋆ இலங்கை
அல்லல் செய்தான் உங்கள் கோமான்⋆ எம்மை அமர்க்களத்து⋆
வெல்லகில்லாதஞ்சினோங்காண்⋆ வெங்கதிரோன் சிறுவா⋆
கொல்ல வேண்டா ஆடுகின்றோம்⋆ குழமணி தூரமே (6)

www.prapatti.com

மாற்றம் ஆவதித்தனையே⋆ வம்மின் அரக்கர் உள்ளீர்⋆
சீற்றம் நும்மேல் தீர வேண்டில்⋆ சேவகம் பேசாதே⋆
ஆற்றல் சான்ற தொல் பிறப்பில்⋆ அனுமனை வாழ்கவென்று⋆
கூற்றம் அன்னார் காண ஆடீர்⋆ குழமணி தூரமே (7)

கவள யானை பாய் புரவித்⋆ தேரோடரக்கர் எல்லாம்
துவள⋆ வென்ற வென்றியாளன்⋆ தன் தமர் கொல்லாமே⋆
தவள மாட நீளயோத்திக்⋆ காவலன் தன் சிறுவன்⋆
குவளை வண்ணன் காண ஆடீர்⋆ குழமணி தூரமே (8)

ஏடொத்தேந்தும் நீள் இலைவேல்⋆ எங்கள் இராவணனார்
ஓடிப்போனார்⋆ நாங்கள் எய்த்தோம்⋆ உய்வதோர் காரணத்தால்⋆
சூடிப் போந்தோம் உங்கள் கோமான் ஆணை⋆ தொடரேன்மின்⋆
கூடிக் கூடி ஆடுகின்றோம்⋆ குழமணி தூரமே (9)

‡வென்ற தொல் சீர்த் தென்னிலங்கை⋆ வெஞ்சமத்து⋆ அன்றரக்கர்
குன்ற மன்னார் ஆடி உய்ந்த⋆ குழமணி தூரத்தை⋆
கன்றி நெய்ந் நீர் நின்ற வேற் கைக்⋆ கலியன் ஒலிமாலை⋆
ஒன்றும் ஒன்றும் ஐந்தும் மூன்றும்⋆ பாடி நின்றாடுமினே (10)

‖ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ‖

www.prapatti.com